# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W.10 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஹெரால்டு செல்வின்ராஜ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 16.01.2020 ல் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 10.35 மணியளவில் திருச்செந்தூர் காவல்நிலைய குற்ற எண் 10/2020 வழக்கு சம்பந்தப்பட்ட கொலையுண்டு இறந்துபோன லெட்சுமணன் என்பவரின் பிரேதத்தை ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் ஐசக் மகாராஜா என்பவர் பிரேத பரிசோதனைக்காக கொண்டு வந்தார். நான் காலை 11.30 மணியளவில் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன். பிரேதத்தில் பிணவிறைப்புத் தன்மை கை மற்றும் கால் பகுதிகளில் இருந்தது. பிரேதம் மிதமான போஷாக்குடன் இருந்தது. கண்கள் மற்றும் வாய் மூடிய நிலையில் இருந்தது. கீழ்க்கண்ட இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட காயங்கள் பிரேதத்தில் இருந்தது.

1. வலது கைபெருவிரலில் 5x3x1cm அளவுள்ள சிதைந்த காயம் இருந்தது.

2. கழுத்தின் நடுப்பக்கத்தில் 6x5x3cm அளவுள்ள சிதைந்த காயம் இருந்தது.

கழுத்து பகுதியை உடற்கூராய்வு செய்தபோது சுவாசக் குழாய் வெட்டுப்பட்டிருந்தது. கழுத்தின் இடது பக்க தசைகளில் வெட்டுக்காயம் இருந்தது. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. இருதயம் மற்றும் நுரையீரல் இயல்பான நிலையில் இருந்தது. வயிறு காலியாக இருந்தது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இயல்பாக இருந்தது. குடல் பகுதி இயல்பாகவும், காற்று அடைக்கப்பட்ட நிலையிலும் இருந்தது. மூளை மற்றும் தண்டுவடங்கள் இயல்பாக இருந்தது. பிரேத பரிசோதனை மதியம் 12.30 மணியளவில் முடிக்கப்பட்டது. மேற்படி நபர் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 24 மணி முதல் 28 மணி நேரத்திற்குள் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ 8**. மேற்படி சுவாசக் குழாயில் ஏற்பட்ட வெட்டுக்காயத்தினால் மேற்படி நபர் மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்திருக்க வாய்ப்புண்டு என்று நான் கருத்து தெரிவித்துள்ளேன். ஒரு உடைந்த பாட்டிலால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

ஆய்வாளர் விசாரணையில் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 24 மணி முதல் 28 மணி நேரத்திற்குள் மேற்படி நபர் இறந்திருக்கலாம் என்று நான் சொன்னேன். மூச்சு குழாயில் ஏற்பட்ட வெட்டுக்காயம் அரிவாள் போன்ற கூர்மையான ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு. கை மற்றும் கால்களில் விறைப்புத் தன்மை இருந்ததால் பிரேத பரிசோதனைக்கு முன்பாக சுமார் 24 மணி முதல் 28 மணி நேரத்திற்குள் அவர் இறந்திருக்கலாம்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.17 19:13:18 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W.11 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சந்திரசேகர். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.03.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது திருச்செந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருச்செந்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணியில் இருந்தபோது 22.01.2020 அன்று திருச்செந்தூர் காவல்நிலைய குற்ற எண் 10/2020 சம்பந்தப்பட்ட வழக்கு சொத்துக்களான ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண், ரத்தக்கறையுடன் கூடிய உடைந்த கிங் பிசர் பீர்பாட்டில், ரத்தக்கறையுடன் கூடிய கருநீலநிற கட்டம்போட்ட அரைகை சட்டை, ரத்தக்கறையுடன் கூடிய பழுப்புநிற பொடி கட்டம்போட்ட சாரம், ரத்தக்கறை படிந்த வெள்ளைநிற அரைக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த சிமெண்ட் மற்றும் வெள்ளை நிற கட்டம்போட்ட சாரம், சிவப்பு நிற பார்டர் போட்ட ஜட்டி ஒன்று ஆகியவற்றை படிவம் 91ன் மூலம் பெற்று PR.No.7/2020 என்ற எண்ணிட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைத்தேன். அந்த படிவங்கள் 91 **அ.சா.9 வரிசை** (எண்ணிக்கையில் 3). மேற்படி பீர்பாட்டில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1. ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண், ரத்தக்கறையுடன் கூடிய கருநீலநிற கட்டம்போட்ட அரைகை சட்டை, ரத்தக்கறையுடன் கூடிய பழுப்புநிற பொடி கட்டம்போட்ட சாரம்,

ரத்தக்கறை படிந்த வெள்ளைநிற அரைக்கை சட்டை, ரத்தக்கறை படிந்த சிமெண்ட் மற்றும் வெள்ளை நிற கட்டம்போட்ட சாரம், சிவப்பு நிற பார்டர் போட்ட ஜட்டி ஒன்று ஆகியவை **சா.பொ.2 முதல் 8**. வழக்கு சொத்துக்களை ரசாயன பரிசோதனைக்காக அனுப்ப வேண்டுமென்று ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ 10**. நீதித்துறை நடுவரிடமிருந்து திருநெல்வேலி வட்டாரத தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ 11**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

மேற்படி படிவம் 91ல் 16.01.2020 அன்று நீதிமன்றம் மேற்குறிப்பில் வழக்கு சொத்துக்களுடன் மேற்படி படிவங்களை திருப்பி சமர்ப்பிக்குமாறு மேற்குறிப்பு செய்து திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு 22.01.2020 அன்றுதான் மீண்டும் வழக்கு சொத்துக்களுடன் மேற்படி படிவங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.03.17 19:13:26 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.